மாஓ சே-துங்

சுங்கிங் பேச்சுவார்த்தைகள் பற்றி

ND

K. Kailasapathy

மாஓ சே-துங்

சுங்கிங் பேச்சுவார்த்தைகள் பற்றி

பிரஜா பிரசுராலயம்,
கொழும்பு-10.

முதற் பதிப்பு: 1967, நவம்பர்

பிரசுரிப்பாளர் குறிப்பு

சுங்கிங் பேச்சுவார்த்தைகள் பற்றி என்ற இவ்விரு கட்டுரைகளின் இத் தமிழாக்கம் 1961 மேயில் பீகிங் அந்நிய மொழிகள் அச்சகத்தினரால் பிரசுரிக்கப் பட்ட முதலாவது ஆங்கிலப் பதிப்பினின்றும் செய்யப்பட்டது. மேற்படி ஆங்கிலப் பதிப்பு, 1960, செப்டம்பரில் பீகிங் மக்கள் பிரசுராலயத்தினராற் பிரசுரிக்கப்பட்ட மாஓ சே-துங்கின் தேர்ந்த கட்டுரைகள், 4-ம் பாகம், முதற் பதிப்பிற் கண்டுள்ள சீன வாசகத்தின் மொழிபெயர்ப்பாகும்.

கொழும்பு 10, ஜயந்த வீரசேகர மாவத்தை இல. 19-ல் உள்ள பிரஜா பிரசுராலயத்தில் கடமையாற்றும் பீகொட பத்திரணகே தயானந்த (அச்சு வேலையாளர்) என்பவரால் ஷ அச்சகத்தில் அச்சிடப்பட்டு பிரஜா பிரசுராலயத்தினரால் வெளியிடப்பட்டது.

இப் பிரசுரம், "கோமின்ராங்குடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பற்றி—சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் சுற்றறிக்கை," "சுங்கிங் பேச்சுவார்த்தைகள் பற்றி" என்ற இரு கட்டுரைகள் அடங்கியது. முன்னையது, சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டிக்காகத் தோழர் மாஓ சே-துங், தாம் கோமின்ராங்குடன் பேச்சுவார்த்தைகளுக்காக சுங்கிங்கிற்குச் செல்லுந் தறுவாயில், தயாரித்த ஒரு உட் கட்சிச் சுற்றறிக்கை; பின்னையது தோழர் மாஓ சே-துங்கினால், தாம் சுங்கிங்கிலிருந்து திரும்பிய பின், யெனானில் இயங்குனர் கூட்டமொன்றிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் அறிக்கை. இக் கட்டுரைகள் இரண்டும் கோமின்ராங்குடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றிய கட்சியின் கொள்கையை எடுத்துக் கூறுகின்றன.

மாஓ சே-துங்கின் தேர்ந்த கட்டுரைகளை
பிரசுரிப்பதற்கான கமிட்டி, மத்திய
கமிட்டி, சீன கம்யூனிஸ்ட் கட்சி.

உள்ளடக்கம்

கோமின்ராங்குடனுன சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பற்றி—சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் சுற்றறிக்கை 1

சுங்கிங் பேச்சுவார்த்தைகள் பற்றி 7

கோமின்ராங்குடனை சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பற்றி —சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் சுற்றறிக்கை

1945, ஆகஸ்ட் 26

ஜப்பானிய படையெடுப்பாளர்களின் விரைவான சரணாகதி நிலைமை முழுவதையும் மாற்றியுள்ளது. சியாங் கே–ஷெக் சரணாகதியை ஏற்கும் உரிமையைத் தனது ஏகபோகமாக்கிக் கொண்டுள்ளதோடு, தற்போதைக்கு (ஒரு கட்டத்திற்கு) பெரிய நகரங்களும் முக்கிய தொடர்பு மார்க்கங்களும் எங்கள் கைகளில் இருக்கவும் மாட்டா. இருப்பினும் வடக்குச் சீனாவில் நாம் இன்னமும் எம்மால் முடிந்தது அவ்வளவையும் எடுத்துக்கொள்ளக் கடுமையாகப் போரிட, எமது முழுச் சக்தியையும் கொண்டு போரிட, வேண்டும். கடந்த இரு வாரங்களில் எமது சேனை பல்வேறு அளவினவான ஐம்பத்தொன்பது நகரங்களையும் விசாலமான கிராமியப் பகுதிகளையும் திரும்பப் பிடித்துள்ளது; ஏற்கனவே எம் கையில் இருந்தவற்றோடு இவற்றையும் சேர்த்து நாம் இப்போது 175 நகரங்களைக் கட்டுப்பாடு செய்கிறோம்; இவ்வாறாக நாம் ஒரு பெரும் வெற்றியை ஈட்டியுள்ளோம். வடக்குச் சீனாவில் நாம் வெய்

ஹாய்வெய், யென்ராய், லுங்கௌ, இட்டு, ட்ஸெசுவான், யாங்லியூசிங், பிகெசி, போ—அய், சாங்சியாகௌ, சினிங், ஃபெங்சென் ஆகிய நகரங்களைத் திரும்பப் பிடித்துள்ளோம். எமது சேனையின் பலம் வடக்குச் சீனவை உலுப்பியும், சோவியத், மொங்கோலிய படைகள் பெருஞ் சுவர் வரை விரைந்து முன்னேறியதோடு சேர்ந்து எமது கட்சிக்குச் சாதகமான நிலைமை ஒன்றைச் சிருஷ்டித்தும் உள்ளது. இனி வரும் காலகட்டத்தில் நாம் தாக்குதலைத் தொடர்ந்து நடத்தவும், பீபிங்—ஸுய் யுவான் புகையிரத மார்க்கம், ராருங்—பூசோ புகையிரத மார்க்கத்தின் வட பிரிவு, செங்ரிங்—ரையுவான், ரெஹ்சோ—ஷிஹ்சியாசுவாங், பாய்குவெய்—சின்செங்,[1] ராஓகௌ—சிங்ஹுஆ புகையிரத மார்க்கங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றுவதற்கும், அத்துடன் பீபிங்—லியாஓனிங், பீபிங்-ஹன்கோ, ரியென்ற்ஸின்—பூகோ, ற்ஸிங்ராஓ—ற்ஸினன், லுங்ஹாய், ஷங்ஹாய்—நான்கிங் புகையிரத மார்க்கங்களைத் துண்டிக்கவும் எம்மால் முடிந்ததையெல்லாம் செய்யவும் வேண்டும். நாம், தற்காலிகமாகத் தானக இருப்பினும், எம்மால் முடிந்த அனைத்தினதும் கட்டுப்பாட்டைப் பெற வேண்டும். அதே நேரத்தில் சாத்தியமானளவு அதிகமான கிராமங்களையும், மாவட்ட, அதிலும் உயர்ந்த நிர்வாக மத்தியஸ்தானங்களையும், சிறு பட்டினங்களையும் கைப்பற்ற அவசியமான படைகள் உபயோகப்படுத்தப்பட வேண்டும். உதாரணமாக, புதிய நான்காம் சேனை நான்கிங், ராய்ஹு ஏரி, ரியென்மு மலைகள் ஆகியவற்றிற்கிடையிலும் யங்ற்ஸி, ஹுஆய் நதிகளுக்கிடையிலும் உள்ள பல மாவட்டப் பட்டினங்களைக் கைப்பற்றியுள்ளதாலும், ஷான்ருங்கில் உள்ள எமது படைகள் கிழக்கு ஷான்ருங் குடாநாடு முழுவதையும் கைப்பற்றியுள்ளதாலும், ஷான்ஸி—ஸுய்யுவான் எல்லைப் பிரதேசத்தில் உள்ள எமது படைகள் பீபிங்—ஸுய்யுவான் புகையிரத மார்க்கத்திற்கு வடக்கேயும் தெற்கேயும் உள்ள பல நகரங்களையும் பட்டினங்களையும் கைப்பற்றியுள்ளதாலும் மிகச் சாதகமான ஒரு நிலைமை சிருஷ்டிக்கப்பட்டுள்ளது.

மற்றுமொரு தாக்குதல் நடவடிக்கைக் காலகட்டத்தின் பின்னர் எமது கட்சி கீழ் யங்ற்ஸி நதிக்கும் ஹுவாய் நதிக்கும் வடக்கே உள்ள பகுதிகளில் அநேகமானவற்றையும், ஷான்ருங், ஹோபெய், ஷான்ஸி, ஸுய்யுவான்[2] மாகாணங்களில் அநேகமான பாகத்தையும், ஜெஹொல், சாஹார் மாகாணங்கள்[3] முழுவதையும், லியாஓனிங் மாகாணத்தில் ஒரு பகுதியையும் கட்டுப்பாடு செய்வது சாத்தியமாக இருக்கும்.

தற்போது சோவியத் யூனியனும் அமெரிக்காவும் பிரித்தானியாவும் எல்லாமே சீனவில் உள்நாட்டு யுத்தத்தை ஏற்கவில்லை;[4] அதே நேரத்தில் எமது கட்சியும் சமாதானம், ஜனநாயகம், ஐக்கியம் என்ற கோஷங்களை முன்வைத்து,[5] ஐக்கியம், தேசிய புனர் நிர்மாணம் ஆகிய பெரும் பிரச்சினைகளை சியாங் கே-ஷெக்குடன் விவாதிக்கத்[6] தோழர்கள் மாஓ சே-துங், சௌ என்-லாய், வாங் ஜோ-ஃபேய்[7] ஆகியோரைச் சுங்கிங்கிற்கு அனுப்புகிறது; இவ்வாருக, சீனப் பிற்போக்காளர்களின் உள்நாட்டு யுத்தச் சதி நிராசையாக்கப்படலாம் என்பது சாத்தியமாக உள்ளது. கோமின்ராங் இப்பொழுது ஷங்ஹாயையும் நான்கிங்கையும் பிற இடங்களையும் திரும்பக் கைப்பற்றியும், கடல் மார்க்க தொடர்புகளைத் திரும்பத் தொடங்கியும், விரோதியின் ஆயுதங்களைக் கையேற்றும், கைப்பொம்மைத் துருப்புகளைத் தன் சொந்தப் படைகளிற் சேர்த்தும், தனது ஸ்தானத்தைப் பலப்படுத்திக் கொண்டுள்ளது. இருப்பினும் அது ஆயிரம் பெரும் காயங்கள் பட்டுச் சிதைந்தும், எண்ணில் அடங்காத உள் முரண்பாடுகளால் உருக்குலைந்தும், பெரும் கஷ்டங்களில் மூழ்கியும் கிடக்கிறது. பேச்சுவார்த்தைகளின் பின்னர் கோமின்ராங், உள்நாட்டு, அந்நிய நிர்ப்பந்தத்தின் கீழ், எமது கட்சியின் அந்தஸ்தை நிபந்தனையின் பேரில் அங்கீகரிக்கக் கூடும் என்பது சாத்தியமே. எமது கட்சியும் கோமின்ராங்கின் அந்தஸ்தை நிபந்தனையின் பேரில் அங்கீகரிக்கக் கூடும். இது இரு கட்சிகளுக்கும் (கூடவே, ஜனநாயக அணி[8] முதலான

வற்றுக்கும்) இடையில் ஒத்துழைப்பினதும், சமாதானமான அபிவிருத்தியினதும் புதிய கட்டம் ஒன்றைக் கொண்டு வரும். அப்படியாகும் பட்சத்தில் எமது கட்சி சட்ட ரீதியான போராட்ட முறைகள் எல்லாவற்றையும் தேர்ந்து கொள்ள முயலவும், கோமின்ராங் பகுதிகளில் நகரங்கள், கிராமங்கள், சேனை ஆகிய மூன்று பிரதான துறைகளிலும் (எல்லாம் அங்கு எமது வேலையில் பலவீனமாயுள்ள அம்சங்கள்) தனது வேலையை உக்கிரப்படுத்தவும் வேண்டும். பேச்சு வார்த்தைகளின் போது கோமின்ராங் நிச்சயமாக நாம் விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களின் விசாலத்தைப் பெருமளவு குறைக்கவும், விடுதலைச் சேனையின் பலத்தைக் குறைக்கவும், நாணயம் விடுப்பதை நிறுத்தவும் வேண்டும் என்று கோரும். எம் பங்கிற்கு நாம் அவசியமானவையும் மக்களின் அடிப்படை நலன்களுக்குக் குந்தகம் விளைவிக்காதவையுமான விட்டுக் கொடுத்தல்களைச் செய்யத் தயாராயிருக்கிறோம். அத்தகைய விட்டுக் கொடுத்தல்கள் இல்லாமல் எம்மால் கோமின்ராங்கின் உள்நாட்டு யுத்தச் சதியைத் தகர்க்கவும் இயலாது, அரசியல் முன்னேற்றத்தைப் பெறவும் இயலாது, உலக பொதுஜன அபிப்பிராயத்தினதும் நாட்டிற்குள்ளே உள்ள நடுப்பாதைக்காரர்களினதும் அனுதாபத்தை வென்றெடுக்கவும் இயலாது, பரிமாற்றாக எமது கட்சிக்குச் சட்ட ரீதியான அந்தஸ்தையும் சமாதான நிலைமையையும் பெறவும் இயலாது. ஆனால் அத்தகைய விட்டுக் கொடுத்தல்களுக்கு வரம்புகள் உண்டு; அவை மக்களின் அடிப்படை நலன்களுக்குக் குந்தகம் செய்யக் கூடாது என்பதே கோட்பாடாகும்.

எமது கட்சி மேற்படி நடவடிக்கைகளை எடுத்த பின்னர் கோமின்ராங் இன்னமும் உள்நாட்டு யுத்தத்தைத் தொடுக்க விரும்புமாயின் அது தேசம் முழுவதினதும் உலகம் முழுவதினதும் பார்வையிற் தன்னைக் குற்றத்தில் இட்டுக்கொள்ளும், எமது கட்சிக்கு அதன் தாக்குதல்களை முறியடிக்கத் தற்காப்பு யுத்தம் ஒன்றை நடத்த நியாயமும் இருக்கும். மேலும் எமது கட்சி சக்திமிக்கது; எவராவது எம்மைத்

தாக்கி, சூழ்நிலைகளும் சண்டைக்குச் சாதகமானவையாக இருந்தால் நாம் நிச்சயமாகத் தற்காப்பு நடவடிக்கை எடுத்து அவரை உறுதியுடனும் முற்று முழுதாகவும் பூரண மாகவும் அழித்தொழிப்போம் (நாம் கண்மூடித்தனமாகத் தாக்குவதில்லை, ஆனால் நாம் தாக்கும்போது நாம் வென்றாக வேண்டும்). நாம் ஒருபோதும் பிற்போக்காளர்களின் சண்டப்பிரசண்டத்தால் அஞ்சிவிடக் கூடாது. ஆனால் நாம் எல்லாத் தருணங்களிலும் பின்வரும் கோட்பாடுகளுடன் ஒட்டி நிற்க வேண்டும், இவற்றை ஒருபோதும் மறக்கக் கூடாது: ஐக்கியம், போராட்டம், போராட்டத்தின் மூலம் ஐக்கியம்; நல்ல காரணத்துடனும் சாதகத்துடனும் சுய கட்டுப்பாட்டுடனுமே போராட்டங்களை நடத்துவது; முரண்பாடுகளைப் பயன்படுத்தி, பலரை வென்றெடுத்து, சிலரையே எதிர்த்து, எமது விரோதிகளை ஒருவர் பின் ஒருவராகத் துகளாக்குவது.

க்வாங்துங்கிலும் ஹுனானிலும் ஹூபெஹ்யிலும், ஹோனானிலும் மற்றும் சில மாகாணங்களிலும் எமது கட்சிப் படைகள், வடக்குச் சீனாவிலும் யங்ற்ஸி, ஹுஆய் நதிகளுக்கிடையிலான பகுதியிலும் உள்ளதை விட அதிக கஷ்டமான ஒரு நிலைமையில் இருக்கின்றன. அந்த இடங்களில் உள்ள தோழர்கள் மத்திய கமிட்டியின் கவனத்திற் பெரிதும் இடம்பெற்றுள்ளனர். ஆனால் கோமின்ராங் பல வீனமான ஸ்தானங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது, அதன் பிரதேசங்களும் விசாலமானவை; எமது தோழர்கள் ராணுவக் கொள்கையிலும் (நகர்வதிலும் நடவடிக்கைகளிலும்), மக்களுடன் ஐக்கியமுறும் கொள்கையிலும் பெரிய தவறுகள் எதையும் செய்யாதிருக்கும் பட்சத்திலும், அவர்கள் அடக்கத்துடனும் கவனமாயும், அகம்பாவமின்றியும் கண்மூடித்தனமாக இல்லாமலும் இருக்கும் பட்சத்திலும் அவர்கள் நிலைமையைக் கையாள முற்றும் வல்லவர்களாக இருப்பர். மத்திய கமிட்டியிடமிருந்து அவசியமான உத்தரவுகளைப் பெறுவது போக, இந்தப் பகுதிகளில் உள்ள தோழர்கள் தங்கள் சொந்தச் சிந்தனையை உபயோகித்து நிலைமையை

ஆராயவும், தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கவும், கஷ்டங்களைக் கடக்கவும், தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளவும், தங்கள் படைகளை விரிவுபடுத்தவும் வேண்டும். கோமின்ராங்கினுல் உங்களை எதுவும் செய்ய முடியாது போகும்போது, அது இரு கட்சிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் உங்கள் படைகளுக்கு அங்கீகாரம் அளிக்கவும் இருதரப்புகளுக்கும் சாதகமான ஏற்பாடுகளுக்கு இணங்கவும் நிர்ப்பந்திக்கப்படக்கூடும். ஆனுல் நீங்கள் நிச்சயமாகப் பேச்சுவார்த்தைகளை நம்பியிருக்கக் கூடாது, நிச்சயமாகக் கோமின்ராங் இரக்கமுடையதாக இருக்கும் என்று நம்பிக்கை வைக்கக் கூடாது, ஏனெனில் அது ஒருபோதும் இரக்கமுடையதாக இராது. நீங்கள் உங்கள் சொந்தப் பலத்திலும், நடவடிக்கைகளைச் சரியாக வழி நடத்துவதிலும், கட்சிக்குள் சகோதரத்துவ ஐக்கியத்திலும், மக்களுடன் நல்ல உறவுகளிலும் தங்கிநிற்க வேண்டும். மக்களில் உறுதியாகத் தங்கிநில்லுங்கள், அதுவே உங்களுக்குள்ள வழி.

தொகுத்துக் கூறினுல், எமது கட்சி புறக்கணிக்கப் படக் கூடாத கஷ்டங்கள் பலவற்றை எதிர்நோக்குகிறது; கட்சித் தோழர்கள் எல்லோரும் மனேரீதியில் நன்கு தயாராக இருக்க வேண்டும். ஆனுல் சர்வதேச, உள்நாட்டு நிலைமையின் பொதுவான போக்கு எமது கட்சிக்கும் மக்களுக்கும் சாதகமாக உள்ளது. கட்சி முழுவதும் ஒரு மனிதனைப் போல் ஐக்கியமுற்றிருக்கின்ற வரை, நாம் எல்லாக் கஷ்டங்களையும் படிப்படியாகக் கடக்க வல்லவர்களாக இருப்போம்.

சுங்கிங் பேச்சுவார்த்தைகள் பற்றி

1945, அக்டோபர் 17.

நாம் தற்போதைய நிலைமையைப் பற்றிப் பேசுவோம். அதிற்தான் எமது தோழர்கள் அக்கறை கொண்டுள்ளனர். இம்முறை சுங்கிங்கில் கோமின்ராங்கிற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் நாற்பத்து மூன்று நாட்கள் நீடித்துள்ளன. பலாபலன்கள் ஏற்கனவே பத்திரிகைகளிற் பிரசுரிக்கப்பட்டுள்ளன.[9] இரு கட்சிகளினதும் பிரதிநிதிகள் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். பேச்சுவார்த்தைகள் பலனளித்துள்ளன. கோமின்ராங் சமாதானமும் ஐக்கியமுமாகிய கோட்பாடுகளை ஏற்றும், மக்களின் ஜனநாயக உரிமைகள் சிலவற்றை அங்கீகரித்தும், உள்நாட்டு யுத்தம் தவிர்க்கப்பட வேண்டுமென்றும் இரு கட்சிகளும் ஒரு புதிய சீனவைக் கட்டியெழுப்பச் சமாதானமாக ஒத்துழைக்க வேண்டும் என்றும் இணங்கியும் உள்ளது. இந்த அம்சங்களில் இணக்கம் அடையப்பட்டுள்ளது. இணக்கம் ஏதும் இல்லாத அம்சங்களும் பிற உள்ளன. விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களின் பிரச்சினை தீர்க்கப்படவில்லை, ஆயுதப் படைகளின் பிரச்சினையும் உண்மையிற் தீர்க்கப்படவில்லை. அடையப்பட்ட இணக்கங்கள் இன்னும் எழுத்து வடிவில் மட்டுமே உள்ளன. எழுத்தில் உள்ள வார்த்தைகள் யதார்த்தத்திற்குச் சமானமாகா. அவை யதார்த்தமாக மாற்றப்படுவதற்கு முதலில் இன்

னும் பெருமளவு பிரயாசை எடுக்கப்பட வேண்டும் என உண்மைகள் காண்பித்துள்ளன.

கோமின்ராங் ஒரு புறம் எம்முடன் பேச்சுவார்த்தைகள் நடத்திக்கொண்டும், மறுபுறம் விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களைத் தீவிரமாகத் தாக்கிக்கொண்டும் இருக்கிறது. ஷென்ஸி—கான்ஸு—நிங்ஸியா எல்லைப் பிரதேசத்தைச் சுற்றி வளைத்துள்ள படைகளைக் கணக்கிடாமல், 8,00,000 கோமின்ராங் துருப்புகள் ஏற்கனவே இந்தத் தாக்குதல்களில் நேரடியாக ஈடுபட்டுள்ளன. விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்கள் எங்கெங்கு உள்ளனவோ அங்கெல்லாம் சண்டை நடைபெறுகிறது, அல்லது சண்டைக்குத் தயாரிப்புச் செய்யப்பட்டு வருகிறது. ''அக்டோபர் 10-ந் திகதிய ஒப்பந்தத்''தின் முதல் ஷரத்தே ''சமாதானத்தையும் தேசிய புனர்நிர்மாணத்தையும்'' பற்றியது; எழுத்தில் உள்ள இந்த வார்த்தைகள் யதார்த்தத்திற்கு முரணுகை இல்லையா? ஆம், முரணுகவே உள்ளன. எனவேதான் எழுத்தில் உள்ளதை யதார்த்தமாக மாற்றுவதற்கு எம் பங்கில் இன்னும் பிரயாசை தேவை என நாம் கூறுகிறோம். கோமின்ராங் ஏன் எம்மைத் தாக்குவதற்கு இத்தனை துருப்புகளைத் திரட்டுகிறது? ஏனெனில் அது மக்களின் படைகளை அழித்தொழிப்பதென, எம்மை அழித்தொழிப்பதென, நீண்ட காலத்திற்கு முன்னரே முடிவு செய்து கொண்டதனுல்தான். எல்லாவற்றுக்கும் மேலாக எம்மை விரைவாக அழித்தொழிப்பதையும், அது தவறினுல் எமது நிலைமையை மோசமாக்கித் தனது நிலைமையைச் சிறப்பாக்கிக் கொள்வதையுமே அது விரும்பும். சமாதானம் ஒப்பந்தத்திற் பொறிக்கப்பட்டுள்ளதெனினும் அது உண்மையில் அடையப்பெறவில்லை. ஷான்ஸி மாகாணத்தில் உள்ள ஷாங்ராங் பகுதியைப் போன்ற இடங்களில் கணிசமான பெரிய அளவிற் சண்டை நடக்கிறது. ராய்ஹாங், ராய்யுவெஹ், சுங்ரியாஓ மலைகளாற் சூழப்பட்டதான ஷாங்ராங் பகுதி ஒரு தொட்டியைப் போன்றது. இந்தத் தொட்டியில் மீனும் இறைச்சியும் உள்ளன, அவற்றைக் கைப்பற்றிக்கொள்ள

யென் ஹ்ஸி-ஷான் பதின்மூன்று டிவிஷன்[படை]களை அனுப்பினர். எமது கொள்கையும் நெடுங்காலத்திற்கு முன்னரே முடிவாகிவிட்டது — அடிக்கு அடி கொடுப்பதும், ஒவ்வொரு அங்குல நிலத்திற்காகவும் போராடுவதும். இம்முறை நாம் அடிக்கு அடி கொடுத்தோம், போராடினேம், அதையும் மிக நன்கு செய்தோம். வேறு வார்த்தைகளிற் கூறினல், பதின்மூன்று டிவிஷன்களில் அத்தனையையும் நாம் அழித்தொழித்தோம். அவர்களின் தாக்குதற் படைகள் 38,000 வீரர்களைக் கொண்டிருந்தன, நாம் 31,000 வீரர்களை ஈடுபடுத்தினேம். அவர்களின் 38,000 வீரர்களில், 35,000 பேர் அழிக்கப்பட்டனர், 2,000 பேர் ஓட்டமெடுத்தனர், 1,000 பேர் சிதறிப் போயினர்.[10] இத்தகைய சண்டையிடல் தொடர்ந்து நடக்கும். அவர்கள் எப்பாடு பட்டாவது எமது விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களைக் கைப்பற்றிவிடத் துடிக்கின்றனர். இது விளக்கக் கடினமானதாகத் தோன்றுகிறது. அவர்கள் ஏன் கைப்பற்றுவதில் இவ்வளவு ஆர்வமாக இருக்கின்றனர்? விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்கள் எமது கைகளில், மக்களின் கைகளில் இருப்பது நல்லதில்லையா? ஆம், நல்லதுதான்; ஆனல் இது நாம் எண்ணுவது, மக்கள் எண்ணுவது, மட்டுமே. அவர்களும் அப்படி நினைத்தால் ஐக்கியம் இருக்கும், நாமெல்லோரும் ''தோழர்க''ளாக இருப்போம். ஆனல் அவர்கள் இந்த விதமாக எண்ண மாட்டார்கள்; அவர்கள் எம்மைப் பிடிவாதமாக எதிர்ப்பார்கள். அவர்கள் தாம் ஏன் எங்களை எதிர்க்கக் கூடாது என்பதை விளங்கிக்கொள்ள இயலாது. அவர்கள் எம்மைத் தாக்குவது மிக இயற்கையே. எம் பங்கிற்கு நாம் ஏன் அவர்களை எமது விடுதலையாக்கப்பட்ட பகுதிகளைப் பிடித்துக்கொள்ள விட வேண்டுமென்று எமக்கு விளங்கவில்லை. நாம் பதிற்தாக்குதல் செய்வதும் மிக இயற்கையே. ''ஏன் என்று விளங்காதவர்கள்'' இருவர் எதிர்ப்படும்போது அவர்கள் சண்டையிடுகின்றனர். ஏன் என்று விளங்காதவர்கள் இரு சாரார் உள்ளதால், அவர்கள் ஏன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்? அவர்கள் ஏன் ''அக்டோபர் 10-ம் திகதிய ஒப்பந்தத்''தை முடித்தனர்? இந்த உல

தில் காரியங்கள் சிக்கலானவை, பல அம்சங்களால் நிர்ண யிக்கப்படுபவை. நாம் பிரச்சினைகளைப் பல்வேறு கோணங் களிலிருந்தும் பார்க்க வேண்டும், ஆக ஒன்றிலிருந்தல்ல. சுங்கிங்கில் சிலர் சியாங் கே-ஷெக் நம்பத்தகாதவர், ஏமாற் றுக்காரர், அவருடன் பேச்சுவார்த்தைகள் எப்பயனும் தர மாட்டா எனக் கருதுகின்றனர். இவ்வாறு கோமின்ராங் அங்கத்தவர்கள் சிலர் உட்பட நான் சந்தித்த பலர் என்னி டம் கூறினர். அவர்கள் கூறியது நியாயமானது, நல்ல காரணங்களைக் கொண்டது என்றும், விஷயம் அவ்வாறு தான் இருக்கும் எனப் பதினெட்டு வருடங்களின் அனுப வம்[11] எமக்கு நன்கு தெளிவாக்கியுள்ளது என்றும் நான் அவர்களிடம் கூறினேன். கோமின்ராங்கும் கம்யூனிஸ்ட் கட்சியும் அவற்றின் பேச்சுவார்த்தைகளிற் தோல்வி காண் பது நிச்சயம், சண்டையிடத் தொடங்குவதும் நிச்சயம், ஒன்றேடொன்று முறித்துக்கொள்வதும் நிச்சயம்; ஆனல் இது விஷயத்தின் ஒரு கோணம் மட்டுமே. மற்றொரு கோணம், வேறு பல அம்சங்கள் நிச்சயம் சியாங் கே-ஷெக் கை ஐயங்கள் கொள்ளச் செய்தே தீரும் என்பதாகும். இந்த அம்சங்களில் பிரதானமான மூன்று, விடுதலையாக் கப்பட்ட பிரதேசங்களின் வலிமையும், உள்நாட்டு யுத்தத் திற்குப் பெரும் பின் பகுதியில்[12] உள்ள மக்களின் எதிர்ப் பும், சர்வதேச நிலைமையும் ஆகும். எமது விடுதலையாக் கப்பட்ட பிரதேசங்களிற் பத்துக் கோடி மக்களும் பத்து லட் சம் துருப்புகளும் இருபது லட்சம் மிலிசியாப் படையினரும் உள்ளனர்; இது எவரும் சிறுமைப்படுத்தத் துணியாத ஒரு சக்தி. தேசத்தின் அரசியல் வாழ்வில் எமது கட்சியின் ஸ்தானம் இனியும் 1927-ம் ஆண்டில் இருந்த ஸ்தானமும் அல்ல, 1937-ம் ஆண்டில் இருந்த ஸ்தானமும் அல்ல. கம் யூனிஸ்ட் கட்சியின் சம அந்தஸ்தை அங்கீகரிக்க எப்போ தும் மறுத்து வந்துள்ள கோமின்ராங் இப்போது அவ்வாறு செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களிலான எமது வேலை ஏற்கனவே சீன முழுவதி லும் உலகம் முழுவதிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. பெரும் பின் பகுதியில் உள்ள மக்கள் சமாதானத்தை

விரும்புகின்றனர், ஜனநாயகம் வேண்டியவர்களாக இருக் கின்றனர். சுங்கிங்கில் இருந்த போது நான் எமக்குப் பரந்த வெகுஜனங்களால் தரப்படும் மனமுவந்த ஆதரவை ஆழ மாக உணர்ந்தேன். அவர்கள் கோமின்ராங் அரசாங்கத் தில் அதிருப்தி கொண்டுள்ளனர், தம் நம்பிக்கைகளை எம் மீது வைக்கின்றனர். எம்மிடம் அனுதாபம் கொண்டுள்ள, அமெரிக்கர்கள் உள்ளிட்ட, பல அந்நியர்களையும் நான் சந்தித்தேன். அந்நிய நாடுகளில் உள்ள பரந்த வெகு ஜனங்கள் சீனுவில் உள்ள பிற்போக்காளர்களிடம் அதிருப் தியும் சீன மக்கள் சக்திகளிடம் அனுதாபமும் கொண்டுள் ளனர். அவர்கள் சியாங் கே-ஷெக்கின் கொள்கைகளையும் ஆட்சேபிக்கின்றனர். எமக்கு நாட்டினதும் உலகினதும் எல்லாப் பகுதிகளிலும் நண்பர்கள் இருக்கின்றனர். நாம் தனித்தில்லை. சீனுவில் உள்நாட்டு யுத்தத்தை எதிர்ப்பவர் களும் சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமாக நிற்பவர் களும் எமது விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களின் மக்களை மட்டுமன்றிப் பெரும் பின் பகுதியிலும் உலகம் எங்கணு முள்ள வெகுஜனங்களையும் உள்ளடக்குகின்றனர். சியாங் கே-ஷெக்கின் அகநிலைப்பட்ட அவா தனது சர்வாதிகாரத்தை நீடிப்பதும் கம்யூனிஸ்ட் கட்சியை அழிப்பதுமே, அனுல் பல புறநிலையான கஷ்டங்கள் அவரின் வழியை அடைக்கின்றன. ஆகவே அவர் யதார்த்தத்தைச் சற்றுக் காண வேண்டியுள் ளது. அவர் யதார்த்தத்தைக் காணவுந்தான் செய்கிறுர், நாமும் யதார்த்தத்தைக் காண்கிறேம். எம்மைப் பேச்சு வார்த்தைகளுக்கு அழைத்ததில் அவர் யதார்த்தவாதியாக இருந்தார், நாம் சென்றதில் நாம் யதார்த்தவாதிகளாக இருந்தோம். நாம் ஆகஸ்ட் 28-ம் திகதி சுங்கிங் போய்ச் சேர்ந்தோம். 1931-ம் ஆண்டு செப்டம்பர் 18-ம் திகதிய சம்பவந்[13] தொட்டே நாட்டிற்குச் சமாதானமும் ஐக்கிய மும் தேவையாக இருந்துவந்துள்ளன என நான் ஆகஸ்ட் 29-ம் திகதி மாலை கோமின்ராங் பிரதிநிதிகளுக் குக் கூறினேன். நாம் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் கோரியிருந்தோம், ஆனுல் அவை யதார்த்தமாகவில்லை. 1937, ஜுலை 17-ம் திகதி பதிற்தாக்குதல் யுத்தம் வெடித்

ததற்கு[14] முன்பாக, 1936–ம் ஆண்டின் ஸியான் சம்பவத்தின்[15] பின்னர் மட்டுமே சமாதானமும் ஐக்கியமும் யதார்த்தமாகின. அந்த யுத்தம் நடைபெற்ற எட்டு ஆண்டுகளின் போது நாம் ஒன்ருக ஜப்பானுக்கு எதிராகப் போரிட்டோம். ஆனல் உள்நாட்டு யுத்தம் ஒருபோதும் நிற்கவில்லே; தொடர்ச்சியான உராய்வுகள், பெரியவையும் சிறியவையும், இருந்துவந்தன. உள்நாட்டு யுத்தம் இருக்கவில்லே என்று கூறுவது ஏமாற்று, உண்மைகளுடன் பொருந்தாதது. கடந்த எட்டு ஆண்டுகளில் பேச்சுவார்த்தை நடத்த நாம் தயாராயிருப்பதைத் திரும்பத் திரும்பத் தெரிவித்தோம். எமது கட்சியின் ஏழாவது மாநாட்டில் நாம், ''கோமின்ராங் அதிகாரிகள் தமது தற்போதைய தவருன கொள்கைகளேக் கைவிட மனமுள்ளவர்களாகி, ஜனநாயக சீர்திருத்தங்களுக்கும் இணங்கியதும் அவர்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகள் தொடங்க நாம் தயாராக உள்ளோம்,''[16] எனப் பிரகடனம் செய்தோம். பேச்சுவார்த்தைகளில் நாம், முதலாவதாகச் சீனுவுக்குச் சமாதானம் தேவை, இரண்டாவதாக அதற்கு ஜனநாயகம் தேவை என்று பிரகடனம் செய்தோம். ஆட்சேபிப்பதற்கு எந்தக் காரணத்தையும் கண்டுபிடிக்கச் சியாங் கே-ஷெக்கினுல் முடியவில்லே, அவர் இணங்க வேண்டியதாயிற்று. ஒருபுறம் ''உரையாடல்களின் சுருக்கத்''தில் பிரசுரிக்கப்பட்ட சமாதானக் கொள்கையும் ஜனநாயகம் பற்றிய இணக்கங்களும் எழுத்தில் உள்ள வார்த்தைகள், அவை இன்னும் யதார்த்தமல்ல; மறுபுறம் அவை பல்வேறு வகைப்பட்ட சக்திகளால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. விடுதலேயாக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் சக்திகள், பெரும் பின் பகுதிகளில் உள்ள மக்களின் சக்திகள், சர்வதேச நிலேமை — பொதுவான போக்கு, கோமின்ராங்கை இவற்றை ஏற்க நிர்ப்பந்தித்துள்ளது.

''அடிக்கு அடி'' கொடுப்பது எவ்வாறு என்பது நிலேமையைப் பொறுத்துள்ளது. சில சமயங்களில் பேச்சுவார்த்தைகளுக்குச் செல்லாமல் இருப்பது அடிக்கு அடி கொடுப்பதாகும்; சில சமயங்களில் பேச்சுவார்த்தைகளுக்குச் செல்

வதும் அடிக்கு அடி கொடுப்பதாகும். நாம் முன்னர் போகாமலிருந்தது சரி, இம்முறை போனதும் சரி; இரு தடவைகளிலும் நாம் அடிக்கு அடி கொடுத்திருக்கிறோம். நாம் இம்முறை சென்றது நல்லதாயிற்று, ஏனெனில் கம்யூனிஸ்ட் கட்சி சமாதானத்தையும் ஐக்கியத்தையும் விரும்பவில்லை என்று கோமின்ராங் பரப்பிய வதந்தியை நாம் உடைத்துக் காட்டிவிட்டோம். அவர்கள் எம்மை அழைக்க அடுத்தடுத்து மூன்று தந்திகள் அனுப்பினர், நாம் சென்றோம். ஆனால் அவர்கள் முற்றாகத் தயாரில்லாமல் இருந்தனர், நாமே எல்லாப் பிரேரணைகளையும் செய்ய வேண்டியதாக இருந்தது. பேச்சுவார்த்தைகளின் பயனாகக் கோமின்ராங் சமாதானமும் ஐக்கியமுமாகிய பொதுவான கொள்கையை ஏற்றுள்ளது. அது மிக நல்லது. கோமின்ராங் மீண்டும் உள்நாட்டு யுத்தத்தைத் தொடுக்குமானால் அது முழுத் தேசத்தினதும் முழு உலகினதும் பார்வையில் தன்னைக் குற்றவாளியாக்கிக் கொள்ளும், எமக்கும் அதன் தாக்குதல்களை ஒரு தற்காப்பு யுத்தத்தால் முறியடிக்க அதிக நியாயமிருக்கும். இப்போது ''அக்டோபர் 10-ம் திகதிய ஒப்பந்தம்'' செய்யப்பட்டுள்ளதால், எமது பணி அந்த ஒப்பந்தத்தை உயர்த்திப் பிடிப்பதும், கோமின்ராங் அதைக் கௌரவிக்க வேண்டுமெனக் கோருவதும், சமாதானத்திற்காகத் தொடர்ந்தும் உழைப்பதும் ஆகும். அவர்கள் போர் செய்வார்களேயானால் நாம் அவர்களை முற்றாக அழித்தொழிப்போம். காரியங்கள் இவ்வாறுதான் உள்ளன: அவர்கள் தாக்கி, நாம் அவர்களை அழித்தொழித்தோமானால் அவர்களுக்கு அந்தத் திருப்தி இருக்கும்; சிலரை அழித்தொழித்தால் சிறிது திருப்தி இருக்கும்; பலரை அழித்தொழித்தால் அதிக திருப்தி இருக்கும், அனைவரையும் அழித்தொழித்தால் பூரண திருப்தி இருக்கும். சீனாவின் பிரச்சினைகள் சிக்கலானவை, எமது மூளைகளும் சிறிது சிக்கலானவையாக இருக்க வேண்டும். அவர்கள் சண்டையிடத் தொடங்கினால், நாம் எதிர்த்துச் சண்டையிடுவோம், சமாதானத்தை வென்றெடுக்கச் சண்டையிடுவோம். விடுதலையாக்

கப்பட்ட பிரதேசங்களைத் தாக்கத் துணியும் பிற்போக்கா ளர்களுக்கு நாம் பலமான அடிகள் கொடுத்தாலன்றி சமா தானம் வராது.

நாம் ஏன் எட்டு விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களை விட்டுக்கொடுக்க வேண்டும் எனச் சில தோழர்கள் வினவி யுள்ளனர்.[17] இந்த எட்டுப் பிரதேசங்களையும் விட்டுக் கொடுப்பது மிகக் கவலைக்குரியதே, ஆனால் அப்படிச் செய் வதே நல்லது. அது ஏன் கவலைக்குரியது? ஏனெனில் இந்த விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்கள் மக்களால் வியர்வை யும் உதிரமும் சிந்திச் சிருஷ்டித்துக் கஷ்டப்பட்டுக் கட்டி வளர்க்கப்பட்டவை. ஆகவே நாம் விஷயங்களை மக்களுக் குத் தெளிவாக விளக்கவும், நாம் விட்டுக்கொடுக்கப் போகும் பிரதேசங்களிற் தகுந்த ஏற்பாடுகள் செய்யவும் வேண்டும். நாம் ஏன் அந்தப் பிரதேசங்களை விட்டுக் கொடுக்க வேண்டும்? ஏனெனில் அப்படி இல்லாவிடில் கோமின்ராங் நிம்மதியே கொள்ளாது. அவர்கள் நான்கிங் கிற்குத் திரும்பிச் செல்லப் போகின்றனர், ஆனால் தெற் கில் உள்ள விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்கள் சில அவர் களின் படுக்கைகளுக்குப் பக்கத்திலோ அல்லது அவர்களின் வீட்டுத் திண்ணையிலோ உள்ளன. நாம் அங்கு இருக்கும் வரை அவர்களால் நிம்மதியாகத் தூங்க இயலாது, ஆகவே அவர்கள் என்ன வந்தாலும் அந்த இடங்களுக்காகப் போரி டுவர். இந்த விஷயத்தில் எமது விட்டுக் கொடுத்தல் உள் நாட்டு யுத்தத்திற்கான கோமின்ராங்கின் சதிகளை நிராசை யாக்கவும், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள எண் ணிறந்த நடுநிலைமைக்காரர்களின் அனுதாபத்தை எமக்கு வென்றெடுக்கவும் உதவும். ஹ்ஸின்ஹூஆ செய்தி ஸ்தா பனம் நீங்கலாகச் சீனாவில் உள்ள மற்றெல்லாப் பிரசார சாதனங்களும் இப்போது கோமின்ராங்கின் கட்டுப்பாட்டில் உள்ளன. அவை எல்லாம் வதந்திகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள். தற்போது நடைபெறும் பேச்சுவார்த் தைகள் சம்பந்தமாக அவை, கம்யூனிஸ்ட் கட்சி ஆகப் பிர தேசத்தையே வேண்டுகிறது, எந்த விட்டுக்கொடுத்தல்களை

யும் செய்யாதாம் என்ற வதந்தியைப் பரப்பியுள்ளன. எமது கொள்கை மக்களின் அடிப்படை நலன்களைப் பாதுகாப்ப தாகும். மக்களின் அடிப்படை நலன்களுக்கு ஊறு செய் யாதிருக்கும் கோட்பாட்டிற்கு அமைந்து, முழு நாட்டின தும் மக்களுக்குத் தேவையாக உள்ள சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்கும் பரிமாற்றுகச் சிற்சில விட்டுக்கொடுத்தல் களைச் செய்வது அனுமதிக்கக் கூடியதே. சியாங் கே-ஷெக்கு டனுன எமது கடந்தகால விவகாரங்களிலும் நாம் விட்டுக் கொடுத்தல்களை, இன்னும் பெரிய விட்டுக்கொடுத்தல்களைக் கூட, செய்தோம். 1937-ல், தேச—விசால பதிற் தாக்கு தல் யுத்தத்தை ஏற்படுத்துவதற்காக நாம், நாமாக முன் வந்து, ''தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் புரட் சிகர அரசாங்கம்'' என்ற பெயரைக் கைவிட்டோம், எமது செஞ் சேனையின் பெயரைத் ''தேசிய புரட்சிகர சேனை'' என மாற்றினும், நிலப்பிரபுக்களின் நிலத்தைப் பறிமுதல் செய் வதான எமது கொள்கையை குத்தகையையும் வட்டியை யும் குறைக்கும் ஒரு கொள்கையாக மாற்றினும். இம் முறை தெற்கில் உள்ள சிற்சில பிரதேசங்களை விட்டுக் கொடுத்ததன் மூலம் நாம் அகில சீனுவிற்கும் முழு உல கிற்கும் முன்னுல் கோமின்ராங்கின் வதந்திகளை முற்றுகப் பொய்ப்பித்துள்ளோம். ஆயுதப் படைகளின் பிரச்சினையி லும் விஷயம் இதேதான். கம்யூனிஸ்ட் கட்சி வெறுமனே துப்பாக்கிகளுக்காகப் பறக்கிறது என்று கோமின்ராங் பிர சாரம் கூறி வந்துள்ளது. ஆனுல் நாம் விட்டுக்கொடுத்தல் கள் செய்யத் தயாராக உள்ளதாக நாம் கூறியுள்ளோம். முதலில் நாம் எமது தற்போதைய ஆயுதந் தரித்த பலத்தை 48 டிவிஷன்களாகக் குறைப்பதாகப் பிரேரித்தோம். கோமின்ராங்கிடம் 263 டிவிஷன்கள் உள்ளதால், இதன் அர்த்தம் எமது பலம் மொத்தத்திற் சுமார் ஆறில் ஒரு பங்காக இருக்கும் என்பதாகும். பின்னர் நாம் மேற்கொண் டும் 43 டிவிஷன்களாக, மொத்தத்தில் ஏழில் ஒன்று மட் டுமாக, குறைப்பதாகப் பிரேரித்தோம். கோமின்ராங் பின் னர் தாம் 120 டிவிஷன்களாகக் குறைப்பதாகக் கூறினர். நாமும் அதே விகிதாசாரத்தில், 24 டிவிஷன்களாக அல்

லது 20 டிவிஷன்களாகக் கூடக் குறைப்பதாகக் கூறினேம்; அது இன்னும் மொத்தத்தில் ஏழில் ஒரு பங்காக மட்டுமே இருக்கும். கோமின்ராங் சேனையில் வீரர் தொகையுடன் ஒப்பிடுகையில் அதிகாரிகளின் விகிதாசாரம் அனுவசியமாகப் பெரிதாக உள்ளது; ஒரு டிவிஷனில் வீரர்கள் தொகை 6,000—த்திற்குக் குறைவு. அவர்களின் அளவைப்படி நாம் எமது 12,00,000 வீரர்களைக் கொண்டு 200 டிவிஷன்களை ஆக்கலாம். ஆனல் நாம் அவ்வாறு செய்யப்போவதில்லை. ஆகவே கோமின்ராங் மேற்கொண்டு எதுவும் சொல்ல இயலாது, அவர்களின் வதந்திகள் எல்லாம் பங்கலோட்டாகி விட்டன. இதன் பொருள் நாம் எமது துப்பாக்கிகளைக் கோமின்ராங்கிடம் கையளித்துவிடப் போகிறேம் என்பதா? அப்படியுமில்லை. நாம் எமது துப்பாக்கிகளைக் கையளித்தால் கோமின்ராங்கிடம் மித மிச்சமாகத் துப்பாக்கிகள் வந்துவிடாதா? மக்களின் ஆயுதங்கள், ஒவ்வொரு துப்பாக்கியும் ஒவ்வொரு தோட்டாவும், வைத்திருக்கப்பட வேண்டும், கையளிக்கப்படக்கூடாது.

மேற் சொன்னவைதான் நான் தற்போதைய நிலைமையைப் பற்றித் தோழர்களுக்குக் கூற விரும்புவது. அதன் அபிவிருத்தி பல முரண்பாடுகளைக் காண்பிக்கிறது. கோமின்ராங்குக்கும் எமது கட்சிக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் ஏன் சில பிரச்சினைகளில் இணக்கம் உள்ளது, பிறவற்றில் இணக்கம் இல்லை? உண்மையிற் சண்டை நடந்துகொண்டிருக்கையில் ''உரையாடல்களின் சுருக்கம்'' ஏன் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் பற்றிப் பேசுகிறது? சில தோழர்களால் இத்தகைய முரண்பாடுகளைப் புரிந்து கொள்ள முடியவேயில்லை. நான் கூறியுள்ளது இப் பிரச்சினைகளுக்குப் பதில் தரக் கருதப்பட்டதே. எப்போதும் கம்யூனிஸ-விரோதியாகவும் மக்களுக்கு எதிராகவும் இருந்து வந்துள்ளவரான சியாங் கே-ஷெக்குடன் பேச்சுவார்த்தை நடத்த நாம் ஏன் மனமொப்ப வேண்டும் என்பதைச் சில தோழர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. கோமின்ராங் தங்கள் கொள்கையை மாற்றிக் கொள்ளும் பட்சத்தில்

நாம் அவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தத் தயாராக உள்ளோமெனத் தனது ஏழாவது மாநாட்டில் எமது கட்சி பிரகடனம் செய்ததில் அது சரி செய்ததா, தவறு செய்ததா? அது முற்றும் சரியே செய்தது. சீனப் புரட்சி நீண்ட ஒன்று, அதில் வெற்றி படிப் படியாகத்தான் ஈட்டப்பட முடியும். சீனுவின் எதிர்காலம் எமது பிரயாசைகளிற் தங்கியுள்ளது. நிலைமை சுமார் ஆறு மாதங்கள் வரை ஸ்திரமடையாமலே இருந்துவரும். அதை முழு நாட்டினதும் மக்களுக்குச் சாதகமான ஒரு திசையில் அபிவிருத்தியடையச் செய்ய நாம் எமது பிரயத்தனங்களை இரட்டிக்க வேண்டும்.

இனி, எமது வேலையைப் பற்றி மேலும் சில வார்த்தைகள். பிரசன்னமாயுள்ள சில தோழர்கள் முனைக்குப் புறப்படுவார்கள். பலர், நிரம்பிய உற்சாகத்தோடு, அங்கு வேலை செய்யச் செல்லும் சந்தர்ப்பத்திற்காக ஒருவருடன் ஒருவர் போட்டியிடுகின்றனர்; இந்தத் தீவிரமான, ஆர்வமிக்க உணர்வு பெருமதிப்புடையதுமாகும். ஆனுல் பிழையான கருத்துக்களைக் கொண்டுள்ள, கடக்கப்படுவதற்கு உள்ள பல கஷ்டங்களைப் பற்றி யோசியாது, முனையில் எல்லாம் சுலப வேலையாக இருக்கும் என்றும் தாம் அங்கு யெனுனில் உள்ளதைவிட இலகுவாகக் காலத்தைச் செலுத்தலாம் என்றும் நம்பிக்கொண்டிருக்கின்ற தோழர்களும் சிலர் இருக்கின்றனர். இப்படி எண்ணுபவர்கள் இருக்கிருர்களா? இருக்கிருர்கள் என்றே நான் நம்புகிறேன். இத்தகைய தோழர்களுக்கு நான் தங்கள் கருத்துக்களைத் திருத்திக்கொள்ளுமாறு அறிவுரை கூறுகிறேன். ஒருவர் [அங்கு] போவதானுல் அது வேலை செய்வதற்கே. வேலை என்பது என்ன? வேலை என்பது போராட்டம். அந்த இடங்களில் நாம் கடப்பதற்கும் தீர்ப்பதற்கும் கஷ்டங்களும் பிரச்சினைகளும் உள்ளன. நாம் இந்தக் கஷ்டங்களைக் கடக்க வேலை செய்வதற்கும் போராடுவதற்குமே அங்கு செல்கின்ருேம். கஷ்டங்கள் எங்கு அதிகம் பெரிதாக இருக்கின்றனவோ அங்கு செல்ல விரும்புபவரே நல்ல தோழர். அந்த

இடங்களில் உள்ள வேலை கடினமானது. கடின வேலை, எம் முன்னால் வைக்கப்பட்டுள்ள ஒரு சுமையைப் போன்று, அதைத் தோள் கொடுத்துத் தூக்கும்படி எமக்குச் சவால் விடுப்பது. சில சுமைகள் இலேசானவை, சில பாரமானவை. சிலர் பாரமானதைவிட இலேசானதையே விரும்புகின்றனர்; இவர்கள் இலேசானதை எடுத்துக்கொண்டு பாரமானதைப் பிறருக்கு விட்டுவிடுகின்றனர். இது நல்ல மனப்பான்மையல்ல, சில தோழர்கள் வேறு விதமானவர்கள்; இவர்கள் இலகுவானதையும் சுகத்தையும் பிறருக்கு விட்டுவிட்டுப் பாரமான சுமைகளைத் தாமே சுமக்கின்றனர்; இவர்கள் கஷ்டங்களைத் தாங்க முன் நிற்பவர்கள், சௌகரியங்களை அனுபவிக்கக் கடைசியில் நிற்பவர்கள். இவர்கள் சிறந்த தோழர்கள். நாம் எல்லோரும் இவர்களின் கம்யூனிஸ்ட் உணர்விலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

பல உள்ளூர் இயங்குனர்கள் தங்கள் சொந்த இடங்களை விட்டு முனைக்குச் செல்வர். யெனனுக்கு வந்துள்ள, தெற்கே பிறந்தவர்களான, இயங்குனர்கள் பலரும் முனைக்குப் போகின்றனர். முனைக்குச் செல்லும் எல்லாத் தோழர்களும், ஒருகால் அங்கு சென்று சேர்ந்ததும் அங்கு வேரூன்றி அங்கே பூத்துக் காய்க்க மனோநிதியில் தயாராக இருக்க வேண்டும். கம்யூனிஸ்ட்டுகளாகிய நாம் விதைகளைப் போன்றவர்கள், மக்கள் மண்ணைப் பேன்றவர்கள். நாம் எங்கு சென்றாலும் அங்கெல்லாம் மக்களோடு ஐக்கியமுற்று, அவர்கள் மத்தியில் வேரூன்றி மலர வேண்டும். எமது தோழர்கள் எங்கு சென்றாலும் அங்கெல்லாம் அவர்கள் வெகுஜனங்களுடன் நல்ல உறவுகளைக் கட்டிவளர்க்கவும், அவர்களிடத்து அக்கறை கொள்ளவும், அவர்களுக்குத் தங்கள் கஷ்டங்களைக் கடக்க உதவி செய்யவும் வேண்டும். நாம் வெகுஜனங்களுடன் ஐக்கியமுற வேண்டும்; எவ்வளவு அதிக வெகுஜனங்களுடன் நாம் ஐக்கியமுறுகிறோமோ அவ்வளவுக்கு நல்லது. வெகுஜனங்களை அணிதிரட்டவும் மக்களின் படைகளை விரிவுபடுத்தவும், எமது கட்சியின் தலைமையின் கீழ் ஆக்கிரமிப்பாளியைத் தோற்கடித்து ஒரு புதிய சீன

வைக் கட்டியெழுப்பவும் நாம் முழு மூச்சாக ஈடுபட வேண்டும். இதுவே கட்சியின் ஏழாவது மாநாட்டால் வகுக்கப்பட்ட கொள்கை. இதனை நிறைவேற்ற நாம் முயல வேண்டும். சீனு அதன் விவகாரங்களை நடத்துவதற்கு கம்யூனிஸ்ட் கட்சியிலும் மக்களிலும் தங்கியிருக்கிறது. சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் அடைவதற்கு எமக்கு மனமுமிருக்கிறது வழியும் இருக்கிறது. நாம் முழு மக்களோடும் மேலும் நெருக்கமாக ஐக்கியமுறும் பட்சத்தில், சீனுவின் விவகாரங்கள் நன்கு நடத்தப்பட இயலும்.

2–ம் உலக யுத்தத்தின் பின்னர் உலகிற்கு ஒளிமயமான எதிர்காலம் உள்ளது. இதுவே பொதுவான போக்கு. லண்டனிலான ஐந்து வல்லரசு வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டின் தோல்விக்கு[18] மூன்றும் உலக யுத்தம் ஒன்று வெடிக்கப் போகிறது என அர்த்தமா? இல்லை. 2–ம் உலக யுத்தம் முடிந்த கையோடு மூன்றும் உலக யுத்தமொன்று வெடிப்பது எப்படிச் சாத்தியம் என்று நினைத்துப் பாருங்கள். சமரசம் சாதகமாக இருக்குமாகையால் முதலாளித்துவ, சோஷலிஸ நாடுகள் பல சர்வதேச விஷயங்களில் சமரசங்களை இன்னும் அடையவே செய்யும். முழு உலகினதும் தொழிலாளி வர்க்கமும் மக்களும் சோவியத்–விரோத, கம்யூனிஸ–விரோத யுத்தமொன்றிற்கு உறுதியாக எதிராக உள்ளனர். கடந்த முப்பது ஆண்டுகளில் இரு உலக யுத்தங்கள் நடத்தப்பட்டுள்ளன. 1–ம், 2–ம் உலக யுத்தங்களுக்கிடையில் இருபதுக்கு மேற்பட்ட ஆண்டு கால இடைவெளி இருந்தது. மனித வரலாற்றின் ஐந்து லட்சம் ஆண்டுகளிற் கடைசி முப்பது ஆண்டுகளிற்தான் உலக யுத்தங்கள் நடத்தப்பட்டுள்ளன. 1–ம் உலக யுத்தத்தின் பின்னர் உலகம் பெரும் முன்னேற்றம் அடைந்தது. 2–ம் உலக யுத்தத்தின் பின்னர் உலகம் இன்னும் துரிதமான முன்னேற்றம் அடைவது நிச்சயம். 1–ம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து சோவியத் யூனியன் ஜனித்தது, பல கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஸ்தாபிக்கப்பட்டன — அவை அதற்கு முன் இருக்கவில்லை. 2–ம் உலக யுத்தத்தின் முடி

வின் பின்னர் சோவியத் யூனியன் மேலும் பெருமளவு அதிக பலம்வாய்ந்ததாக உள்ளது, ஐரோப்பாவின் தோற்றமே மாறிவிட்டது, உலகின் தொழிலாளி வர்க்கத்தினதும் மக்களினதும் அரசியல் அறிவுணர்வு மேலும் மிக உயர்வாக உள்ளது, உலகெங்கும் உள்ள முற்போக்கு சக்திகளும் அதிக நெருக்கமாக ஐக்கியமுற்றுள்ளன. எமது சீனுவும் துரிதமான, அடியந்தமான மாற்றத்தை உற்று வருகிறது. சீனுவின் அபிவிருத்தியின் பொதுவான போக்கும் நிச்சயமாகச் சிறப்புற்றுள்ளது, மோசமடையவில்லை. உலகம் முன்னேறுகிறது, எதிர்காலம் ஒளிமயமாக உள்ளது, வரலாற்றின் இந்தப் பொதுவான போக்கை எவரும் மாற்றிவிட முடியாது. மக்கள் வெற்றியிற் தங்கள் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளக் கூடியதாக நாம் அவர்கள் மத்தியில் உலக முன்னேற்றமும் எதிரேயுள்ள ஒளிமயமான வருங்காலமுமாகிய உண்மைகள் பற்றி இடையருத பிரசாரம் நடத்த வேண்டும். அதே நேரத்தில், எமது பாதையில் நெளிவுகளும் சுளிவுகளும் இருக்கும் என்றும் நாம் மக்களுக்கும் எமது தோழர்களுக்கும் கூற வேண்டும். புரட்சியின் பாதை நெடுகில் இன்னமும் பல தடங்கல்களும் கஷ்டங்களும் உள்ளன. ஏழாவது மாநாடு, கஷ்டங்கள் பலவாக இருக்கும் என்று கொண்டது, ஏனெனில் நாம் கஷ்டங்கள் குறைவாக இருக்கும் என்று கொள்வதைவிட அவை அதிகமாக இருக்கும் என்று கொள்ளவே விரும்பினேம். சில தோழர்கள் கஷ்டங்களைப் பற்றி அதிகம் யோசிக்க விரும்புவதில்லை. ஆனல் கஷ்டங்கள் உள்ள விஷயங்கள்; எத்தனை கஷ்டங்கள் உள்ளனவோ அத்தனையையும் நாம் கண்டுகொள்ள வேண்டும், [அவற்றைக் கண்டு கொள்ள மறுக்கும்] ''அங்கீகரியாமைக் கொள்கை'' ஒன்றைக் கைக்கொள்ளக் கூடாது. நாம் கஷ்டங்களைக் கண்டு கொள்ளவும் அவற்றை ஆராயவும் அவற்றிற்கு எதிராகப் போராடவும் வேண்டும். உலகில் நேர்ப் பாதைகள் எதுவும் இல்லை; நாம் நெளிவு சுளிவுகள் கொண்ட பதையைப் பின்பற்றத் தயாராக இருக்க வேண்டும், காரியங்களை மலிவாகப் பெற்றுவிட முயலக் கூடாது. என்றே ஒருநாள் திடீரெனப்

பிற்போக்காளர்கள் எல்லாம் தாமாக மனம் வந்து மண்டியிடுவார்கள் என்று கற்பனை செய்யப்படக்கூடாது. ஒரு வார்த்தையிற் கூறினல், சாத்தியப்பாடுகள் ஒளிமய மாக இருக்கையிற் பாதையில் நெளிவுகளும் சுளிவுகளும் உள்ளன. இன்னும் எம் எதிரிற் பல கஷ்டங்கள் உள் ளன, அவற்றை நாம் புறக்கணிக்கக் கூடாது. முழு மக்க ளுடனும் ஒரு பொதுப் பிரயாசையில் ஐக்கியப்படுவதன் மூலம் நாம் நிச்சயமாக எல்லாக் கஷ்டங்களையும் கடந்து வெற்றியை ஈட்ட முடியும்.

குறிப்புகள்

1. ஷான்ஸி மாகாணத்தில், சிஹ்ஸியென் மாவட்டத்திலுள்ள பாய்குவெய்யிற்கும் சிங்செங்கிற்கும் இடையிலிருந்த ஒரு பூர்த்தியடையாத புகையிரத மார்க்கம்.

2. ஸுய்யுவான் மாகாணம் 1954, மார்ச் 6-ம் திகதி ரத்துச் செய்யப்பட்டு, உள் மொங்கோலிய சுயாட்சிப் பிரதேசத்தில் ஒரு பகுதியாகியது.

3. ஜெஹோல் மாகாணம் 1955-ல் ரத்துச் செய்யப்பட்டது. சாஹார் மாகாணம் 1952-ல் ரத்துச் செய்யப்பட்டது. ஆதியில் அவற்றின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த பிராந்தியங்கள் ஹோபெய், ஷான்ஸி, லியாஓனிங் மாகாணங்களுக்கும் உள் மொங்கோலிய சுயாட்சிப் பிரதேசத்திற்கும் மாற்றப்பட்டன.

4. ஜப்பானின் சரணாகதிச் சமயத்தைச் சுற்றி, சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரித்தானியா, எல்லாம் சிறிது காலத்திற்குச் சீனாவில் உள்நாட்டு யுத்தத்திற்கு ஆட்சேபம் தெரிவித்து வந்தன. இருப்பினும், சீனாவில் உள்நாட்டு யுத்தத்திற்குத் தன் ஆட்சேபம் என அழைக்கப்பட்டது பற்றிய அமெரிக்காவின் அறிக்கை, எதிர்ப்-புரட்சிகர உள்நாட்டு யுத்தமொன்றிற்குத் தயாராவதற்குப் பிற்போக்கு கோமின்டாங் அரசாங்கத்திற்குத் தீவிரமாக உதவி செய்வதற்கான திரை மட்டுமே எனச் சம்பவங்கள் விரைவிற் காண்பித்தன.

5. சமாதானம், ஜனநாயகம், ஐக்கியம், ஆகிய மூன்று பெரும் கோஷங்களும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியால் 1945, ஆகஸ்ட் 25-ம் திகதி, "தற்போதுள்ள நிலைமை பற்றிய பிரகடனத்"தில் முன்வைக்கப்பட்டன. ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் சரணாகதிக்குப் பின்னர் "தேசம் முழுவதையும் எதிர்நோக்குகின்ற முக்கிய பணி, சமாதானத்தினதும் ஜனநாயகத்தினதும் ஐக்கியத்தினதும் அடிப்படையில் தேசிய ஒருமைப்பாட்டை அடையவும் சுதந்திரமான, விடுதலையான, சுபீட்சமான சக்திமிக்க புதிய சீனா ஒன்றைக் கட்டியெழுப்பவும் கூடியதாக, நாட்டில் ஐக்கியத்தை ஸ்திரப்படுத்துவதும், உள்நாட்டுச் சமாதானத்தைப் பேணுவதும், ஜனநாயகத்தை ஏற்படுத்துவதும் மக்களின் வாழ்வைச் சீர்படுத்துவதுமாகும்," என அப்பிரகடனம் சுட்டிக் காட்டியது.

6. ஜப்பானுக்கு எதிரான பதிற் தாக்குதல் யுத்தம் முடிவடைந்த பின்னர் சியாங் கே-ஷெக், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தூண்டுதலின் பேரில், தனது எதிர்ப்-புரட்சிகர உள்நாட்டு யுத்தத்திற்குத் தயாராவதற்குக் காலம் பெறும் நோக்கத்துடன், பேச்சுவார்த்தைகள் நடத்தச் சுங்கிங்கிற்கு வரும்படி தோழர் மாஓ சே-துங்கை அழைத்து அடுத்தடுத்து மூன்று தந்திகளை அனுப்பினர். அப்

போது கோமின்ராங் சீனுவிற்கு அமெரிக்க ஸ்தானிகராக இருந்த பட்ரிக் ஜே. ஹேர்லி, அதே நோக்கத்திற்காகத் தானே யெனனுக்குச் சென்றார். சீன கம்யூனிஸ்ட் கட்சி, சமாதானத்திற்காக உழைக்கச் சாத்தியமான சகல பிரயத்தனங்களையும் செய்யவும், அதனூடாக அமெரிக்க, சியாங் கே-ஷெக் பிற்போக்காளர்களின் சதிகளை அம்பலப்படுத்தவும், அவ்வாறாக வெகுஜனங்களை ஐக்கியப்படுத்தவும் அவர்களுக்குப் போதனையூட்டவும் வேண்டி, கோமின்ராங்குடன் பேச்சுவார்த்தைகள் நடத்தத் தோழர்கள் மாஓ சே-துங், செள என்-லாய், வாங் ஜோ-ஃபெய் ஆகியோரை அனுப்பத் தீர்மானித்தது. தோழர் மாஓ சே-துங்கும் அவரது சகபாடிகளும் ஆகஸ்ட் 28-ம் திகதி சுங்கிங் சென்றடைந்து, கோமின்ராங்குடன் நாற்பத்தி மூன்று நாட்களாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். பேச்சுவார்த்தைகள் அளித்த பயன் "கோமின்ராங்கினதும் சீன கம்யூனிஸ்ட் கட்சியினதும் பிரதிநிதிகளிடையிலான உரையாடல்களின் சுருக்கம்" பிரசுரிக்கப்பட்டது மட்டுமே எனினும், அவை அரசியல் ரீதியிற் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பெருமளவு முன்னேற்றத்தைப் பெறவும் கோமின்ராங்கைச் செயலற்ற ஒரு நிலையில் இடவும் உதவின.

7. தோழர் வாங் ஜோ-ஃபெய் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மிக முந்திய அங்கத்தினர்களில் ஒருவரும், அதன் ஐந்தாம், ஏழாம் மத்திய கமிட்டிகளின் ஒரு அங்கத்தினரும் ஆவார். 1944-46 ஆண்டுகளின் போது அவர் மூன்று சந்தர்ப்பங்களில் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கோமின்ராங்கிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளிற் பங்குபற்றினார். 1945, ஆகஸ்டில் அவர் சியாங் கே-ஷெக்குடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காகத் தோழர் மாஓ சே-துங்குடன் சுங்கிங்கிற்குச் சென்றார். 1946, ஏப்ரல் 8-ம் திகதி அவர் யெனனுக்குத் திரும்புகையில் விமான விபத்தொன்றில் இறந்தார்.

8. ஜனநாயக அணி, 1941-ல், சீன ஜனநாயக அரசியற் கோஷ்டிகளின் சம்மேளனம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டது. அது 1944-ல் சீன ஜனநாயக அணி என்ற பெயரிற் புனரமைக்கப்பட்டது. 1947, அக்டோபரில் பிற்போக்கு கோமின்ராங் அரசாங்கம் ஜனநாயக அணி கலைக்கப்பட உத்தரவிட்டது. கோமின்ராங் பிற்போக்காளர்களின் நிர்ப்பந்தத்தின் கீழ் ஜனநாயக அணியின் வலசாரி அங்கத்தினர்கள் சிலர் அதைக் கலைத்து, நடவடிக்கைகளை நிறுத்தினர். 1948, ஜனவரியில் ஷென் சுன்-ஜூவும் ஜனநாயக அணியின் பிற தலைவர்களும், ஹொங்கொங்கில் ஒரு கூட்டத்தில், அணியின் தலைமை அங்கத்தை மீண்டும் நிறுவவும் அணியின் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கவும் முடிவு செய்தனர். அணி அப்போது நிலவிய நிலைமை பற்றிய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலையோடு இணங்கி, கம்யூனிஸ்ட் கட்சியுடனும் பிற ஜனநாயகக் கட்சிகளுடனும் ஐக்கியத்தையும், சியாங் கே-ஷெக் சர்வாதிகாரத்தை வீழ்த்துவதையும், சீனுவின் உள் விவகாரங்களில் அமெரிக்க ஆயுதந் தரித்த தலையீட்டிற்கு எதிர்ப்பையும் கோரிப் பிரகடனங்கள் விடுத்தது. ஜனநாயக அணியின் வலசாரி அங்கத்தினர்களும் அந்தச் சமயத்தில் இக் கோஷங்களை ஏற்றனர்.

9. இது, 1945, அக்டோபர் 10-ம் திகதி கோமின்ராங்கினதும் சீன கம்யூனிஸ்ட் கட்சியினதும் பிரதிநிதிகளாற் கைச்சாத்திடப்பட்ட, "அக்டோபர் 10-ந் திகதிய ஒப்பந்தம்" என்றும் அழைக்கப்பட்ட, "உரையாடல்களின் சுருக்கத்"தைக் குறிக்கிறது. இந்தச் சுருக்கத்தில் சியாங் கே-ஷெக், கம்யூனிஸ்ட் கட்சியால் முன் வைக்கப்பட்ட "சமாதானமும் தேசிய புனர்-நிர்மாணமுமாகிய அடிப்படைக் கொள்கை"யோடு இணங்குவதாயும், "சமாதானம், ஜனநாயகம், உறுதிப்பாடு, ஐக்கியம் ஆகியவற்றின் அடிப்படையில் நீண்ட கால ஒத்துழைப்பையும் . . . . உள் நாட்டு யுத்தத்தை உறுதியாகத் தவிர்ப்பதையும், சுதந்திரமான, விடுதலையான, சுபீட்சமான, சக்திமிக்க புதிய சீனு ஒன்றைக் கட்டி எழுப்புவதையும்," "சமாதானத்தையும் தேசிய புனர்-நிர்மாணத்தையும் அடைவதற்கு அறவே அவசியமான வழி துறைகளாக அரசியல் வாழ்வை ஜனநாயக மயப்படுத்துவதையும், துருப்புக்களைத் தேசியப்படுத்துவதையும், அரசியற் கட்சிகளின் சமத்துவத்தையும் சட்ட ரீதியான அந்தஸ்தையும்" ஏற்பதாகவும் பாசாங்கு செய்ய வேண்டியதாயிற்று. கோமின்ராங்கின் அரசியல் கட்டுப்பாட்டை விரைவாக ஒரு முடிவுக்குக் கொண்டுவரவும், அரசியற் கலந்தாலோசனை மாநாடொன்றைக் கூட்டவும், "எல்லா ஜனநாயக நாடுகளிலும் சமாதான காலங்களில் மக்கள் அனுபவிக்கின்றவாறுன தனிமனித, நம்பிக்கை, பேச்சு, பத்திரிகை, கூட்ட, ஸ்தாபன சுதந்திரங்களை உத்தரவாதம் செய்யவும், இப்போதுள்ள சட்டங்களையும் உத்தரவுகளையும் இந்தக் கோட்பாட்டுக்கிணங்க ரத்துச் செய்ய, அல்லது திருத்தவும்," இரகசிய சேவைகளை ரத்துச் செய்யவும், "நீதிபதிகளினதும் பொலீஸினதும் அங்கங்கள் தவிர வேறு எந்த அங்கங்களும் கைது செய்வது, வழக்கு நடத்துவது, தண்டனை விதிப்பது ஆகியவற்றைக் கண்டிப்பாகத் தடை செய்யவும்," அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும், "ஸ்தல சுயாட்சியைத் தீவிரமாக நடத்தவும் தாழ்ந்த மட்டத்திலிருந்து மேல் மட்டங்கள் வரை பொதுத் தேர்தல்கள் நடத்தவும்" முதலானவற்றிற்கும் அவர் இணங்க வேண்டி இருந்தது. இருப்பினும் சியாங் கே-ஷெக் அரசாங்கம் மக்கள் சேனையினதும் விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களிலான ஜனநாயக அரசாங்கங்களினதும் சட்ட ரீதியான அந்தஸ்தை அங்கீகரிக்கப் பிடிவாதமாக மறுத்து, "ராணுவத் தலைமையை ஒருமைப்படுத்துவது"ம் "அரசாங்க நிர்வாகத்தை ஒருமைப்படுத்துவது"ம் என்ற சாட்டுகளில், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான மக்கள் சேனையையும் விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களையும் முற்றுக ஒழித்துவிடவும் அகங்காரமாக முயன்றது; இதன் விளைவாக இப் பிரச்சினையில் எந்த இணக்கமும் அடையப் பெற முடியவில்லை. பின்வருபவை "உரையாடல்களின் சுருக்கத்"திலிருந்து எடுக்கப்பட்ட, ஆயுதப் படைகளும் விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களில் அரசியல் அதிகாரமுமாகிய பிரச்சினையிலான பேச்சுவார்த்தைகள் சம்பந்தமான பகுதிகள்; "சுருக்கத்"தில் "அரசாங்கம்" என அழைக்கப்படுவது சியாங் கே-ஷெக்கின் கோமின்ராங் அரசாங்கத்தைக் குறிக்கிறது.

"துருப்புக்களைத் தேசியப்படுத்துவது பற்றி. ராணுவத் தலைமையை ஒருமைப்படுத்தும் நோக்கத்துடன் அரசாங்கம் முழு நாட்டினதும் ஆயுதப் படை

களின் நியாயமான, பகுத்தறிவு ரீதியான புனரமைப்பொன்றை ஏற்படுத்தவும் அதைக் கட்டம் கட்டமாக நிறைவேற்ற வேலைத்திட்டமொன்றை வரையவும், ராணுவப் பிராந்தியங்களின் புதிய வரையறுப்பொன்றைச் செய்யவும், ஆள் திரட்டவும் சேனையில் காலியாகும் இடங்களை நிரப்பவுமான ஒரு ஒழுங்கை நிறுவவும் வேண்டுமெனச் சீன கம்யூனிஸ்ட் கட்சி பிரேரித்தது. இத்தகைய ஒரு வேலைத்திட்டம் உள்ள பட்சத்திற் தான் தனது ஆணையின் கீழ் உள்ள ஜப்பானிய-விரோத துருப்புகளை இருபத்து நான்கு டிவிஷன்களுக்கோ, அல்லது ஆகக் குறைந்தது இருபது டிவிஷன்களுக்கோ, குறைக்கவும், இப்போது க்வாங்டுங், செகியாங், தெற்கு கியாங்ஸு, தெற்கு அன்ஹ்வெய், மத்திய அன்ஹ்வெய், ஹூனன், ஹூபெஹ், ஹோனன் (வடக்கு ஹோனன் உட்படாமல்) ஆகிய எட்டுப் பிரதேசங்களிலும் பரவலாக உள்ள தனது ஜப்பானிய-விரோதத் துருப்புகளை அணிதிரட்டுவதற்கு உடனடியான நடவடிக்கை எடுக்கவும் தயாராக உள்ளதாக அது கூறிற்று. புனரமைக்கப்பட உள்ள துருப்புக்கள் மேற் கூறிய பிரதேசங்களிலிருந்து சிறிது சிறிதாக வாபஸ்பெற்று லுங்ஹாய் புகையிரத மார்க்கத்திற்கு வடக்கேயும் வட கியாங்ஸுவிலும் வட அன்ஹ்வெய்யிலும் உள்ள விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களில் மீண்டும் திரட்டப்படும். ஒரு தேச-விசால அடிப்படையிற் துருப்புக்களின் புனரமைப்பிற்கான வேலைத்திட்டம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது என்றும், தற்போதைய பேச்சுவார்த்தைகளில் எழுகின்ற பிரச்சினைகள் எல்லாம் தீர்க்கப்பட்டால் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான ஜப்பானிய-விரோத துருப்புகளை இருபது டிவிஷன்களாகப் புனரமைப்பதை யோசிக்க அரசாங்கம் தயாராக உள்ளது என்றும் அரசாங்கம் கூறியது. இந்தத் துருப்புகளை வைத்திருக்கும் இடங்களின் பிரச்சினை சம்பந்தமாக, சீன கம்யூனிஸ்ட் கட்சி விவாதத்திற்கும் முடிவிற்கும் திட்டங்களைச் சமர்ப்பிக்கலாம் எனவும் அது மேலும் கூறியது. கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் ஸ்தல ராணுவ ஆட்களும் தேசிய ராணுவ சபையினதும் அதன் பல்வேறு இலாகாக்களினதும் வேலையிற் பங்குபற்ற வேண்டும் என்றும், அரசாங்கம் தற்போதுள்ள ஆட்கள் ஒழுங்கைப் பேணவும் தற்போதுள்ள ஆட்களைப் புனரமைக்கப்பட்ட கூறுகளிற் பல்வேறு தரங்களிலும் அதிகாரிகளாகக் கமிஷன் செய்யவும் வேண்டும் என்றும், புனரமைப்பின் பின்னர் நியமனம் பெருத அதிகாரிகள் பயிற்சியளிப்பதற்காகப் பல்வேறு பகுதிகளுக்கு நியமிக்கப்படவும் நியாயமான வாழ்க்கைப் படிகளின் ஒழுங்கொன்றும் அரசியற் போதனைக்கான ஒரு திட்டமும் கைக்கொள்ளப்படவும் வேண்டும் என்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சி பிரேரித்தது. அரசாங்கம் இப்பிரேரணைகளுக்குத் தனக்கு ஆட்சேபணைகள் எதுவும் இல்லை என்றும் தான் விபரங்களை விவாதிக்கத் தயார் என்றும் தெரியப்படுத்தியது. விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களிலான மிலிசியாப் படையினர் எல்லோரும் ஸ்தல தற்-பாதுகாப்புப் படைகளாகப் புனரமைக்கப்பட வேண்டுமெனச் சீன கம்யூனிஸ்ட் கட்சி பிரேரித்தது. ஸ்தல சூழ் நிலைகள் தேவையாக்குகின்ற அல்லது அனுமதிக்கின்ற இடங்களில் மட்டுமே இத்தகைய புனரமைப்புப் பற்றி யோசிக்க முடியும் என அரசாங்கம் தெரியப்படுத்தியது. இந்தப் பகுதியில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள எல்லாப் பிரச்சினைகளும் சம்பந்தமாகத் திட்டவட்டமான திட்டங்களை உருவாக்க வேண்டி, தேசிய ராணுவ சபையின்

ராணுவ நடவடிக்கைகள் குழு, யுத்த அமைச்சு, பதினெட்டாவது கோஷ்டிச் சேனை ஆகியவை ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதியாக மூவர் கொண்ட உப-கமிட்டியொன்று அமைக்கப்பட வேண்டுமென இரு தரப்புகளும் இணங்கின."

"விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களிலான ஸ்தல அரசாங்கங்கள் பற்றி. விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்க்ளிற் சகல மட்டங்களிலுமுள்ள, மக்களாற் தெரிவு செய்யப்பட்ட, அரசாங்கங்களின் சட்ட ரீதியான அந்தஸ்தை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டுமெனச் சீன கம்யூனிஸ்ட் கட்சி பிரேரித்தது. ஜப்பான் சரணடைந்து விட்டதால் 'விடுதலையாக்கப்பட்ட பிரதேசம்' என்ற பதம் காலாவதியாகியிருக்க வேண்டும் என்றும் நாடு பூராவிலும் அரசாங்க நிர்வாகம் ஒருமைப் படுத்தப்பட வேண்டுமென்றும் அரசாங்கம் தெரியப்படுத்தியது. சீன கம்யூனிஸ்ட் கட்சியினால் முன்வைக்கப்பட்ட முதற் பிரேரணை, பதினெட்டு விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்கள் இருப்பதைக் கருத்திற் கொண்டு, மாகாண, நிர்வாகப் பிராந்தியங்கள் புதிதாக வரையறுக்கப்பட வேண்டும் என்பதும், அரசாங்க நிர்வாகத்தை ஒருமைப்படுத்துவதற்காக அது (கம்யூனிஸ்ட் கட்சி) அரசாங்கத்தால் மீண்டும் நியமிக்கப்படுவதற்கு பல்வேறு மட்டங்களிலும் உள்ள, மக்களாற் தெரிந்தெடுக்கப்பட்ட அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அனைவரினதும் பெயர்ப் பட்டியல் ஒன்றைச் சமர்ப்பிக்கும் என்பதுமாகும். அதிபர் சியாங் திரு. மாஓவிற்குக் கூறியுள்ளவாறு, நாடு பூராவிலும் ராணுவத் தலைமையும் அரசாங்க நிர்வாகமும் ஒருமைப்படுத்தப்பட்ட பின்னர் மத்திய அரசாங்கம் சீன கம்யூனிஸ்ட் கட்சியினால் நியமிக்கப்படும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பற்றி யோசித்துப் பார்க்கும் என அரசாங்கம் தெரியப்படுத்தியது. பதிற் தாக்குதல் யுத்தத்தின் போது திரும்பப் பிடிக்கப்பட்ட பிரதேசங்களிற் சேவை செய்த நிர்வாக உத்தியோகஸ்தர்களில், கட்சிச் சார்பைப் பொருட்படுத்தாது அவர்களின் திறமை, சேவை ஆகியவற்றைக் கணக்கில் எடுத்து, உரிய பிரமாணமான எண்ணிக்கையினரைத் தொடர்ந்து வைத்துக்கொள்வதை அரசாங்கம் யோசிக்கும். இதன் மேல், ஷென்வஸி-கான்ஸு-நிங்ஸியா எல்லைப் பிரதேசத்தினதும் ஜெஹொல், சாஹார், ஹோபெய், ஷான்டுங், ஷான்வஸி ஆகிய ஐந்து மாகாணங்களினதும் மாகாண அரசாங்கங்களின் தலைவர்களாகவும் அங்கத்தினர்களாகவும், ஸுய்யுவான், ஹோனான், கியாங்ஸு, அன்ஹ்வெய், ஹூபெஹ், க்வாங்டுங் ஆகிய ஐந்து மாகாண அரசாங்கங்களின் உபதலைவர்களாகவும் அங்கத்தினர்களாகவும் சீன கம்யூனிஸ்ட் கட்சியினால் குறிப்பிடப்படுபவர்களை மத்திய அரசாங்கம் நியமிக்க வேண்டும் (ஏனெனில் மேற் கூறப்பட்ட பதினொரு மாகாணங்களிலும் விசாலமான விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்கள் அல்லது அவற்றின் பகுதிகள் உள்ளன) என அதைக் கேட்கும் இரண்டாவது பிரேரணை ஒன்று சீன கம்யூனிஸ்ட் கட்சியினால் முன்வைக்கப்பட்டது. அத்துடன் பீபிங், ரியென்ற்ஸின், ற்ஸிங்டாஓ, ஷங்ஹாய் ஆகிய நான்கு விசேஷ நகராட்சிகளினதும் உதவி மேயர்களாகத் தான் குறிப்பிடுபவர்கள் நியமிக்கப்படுவதையும், வடகிழக்கு மாகாணங்களின் நிர்வாகத்திற் தான் குறிப்பிடுபவர்கள் பங்குபற்றுவதையும் சீன கம்யூனிஸ்ட் கட்சி கோரியது.

இவ்விஷயத்திற் பல விவாதங்களின் பின்னர் சீன கம்யூனிஸ்ட் கட்சி மேற் கூறிய பிரேரணைகளில் மாற்றம் செய்து, தான் குறிப்பிடுபவர்கள் ஷென்ஸி-கான்ஸு-நிங்ஸியா எல்லைப் பிரதேசத்தினதும் ஜெஹோல், சாஹார், ஹோபெய், ஷான்டுங் ஆகிய நான்கு மாகாணங்களினதும் மாகாண அரசாங்கங்களின் தலைவர்களாகவும் அங்கத்தினர்களாகவும், ஷான்ஸி, ஸுய்யுவான் ஆகிய இரு மாகாண அரசாங்கங்களின் உப-தலைவர்களாகவும் அங்கத்தினர்களாகவும், பீபிங், தியென்ற்ஸின், ற்ஸிங்ராஓ ஆகிய மூன்று விசேஷ நகராட்சிகளினதும் உதவி மேயர்களாகவும் நியமிக்கப்பட வேண்டும் எனக் கோரியது. இதற்கு அரசாங்கம், பதிற் தாக்குதல் யுத்தத்தில் திறமான சேவை ஆற்றியவர்களும் நிர்வாகத் திறமை உடையவர்களுமான தனது அங்கத்தினர்களைச் சீன கம்யூனிஸ்ட் கட்சி நியமனத்திற்காக அரசாங்கத்திற்குக் குறிப்பிடலாமெனினும், அது எந்தக் குறித்த மாகாண அரசாங்கத்தினதும் தலைவரையோ உப-தலைவரையோ அங்கத்தினர்களையோ நியமிப்பதில் பிடிவாதமாக இருந்தால் அது ராணுவத் தலைமை, அரசாங்க நிர்வாகம் ஆகியவற்றின் ஒருமையை அடைய விசுவாசமாக முயல்வதாகாது எனப் பதிலளித்தது. பின்னர் சீன கம்யூனிஸ்ட் கட்சி தான் தனது இரண்டாவது யோசனையை வாபஸ் பெறுவதாகக் கூறி, மூன்றாவதொரு பிரேரணையை முன் வைத்தது. விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களில் எல்லா மட்டங்களிலும் தற்போதுள்ள, மக்களாற் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கங்களின் கீழ் பொதுத் தேர்தல்கள் நடத்தப்பெற வேண்டும் என்றும், அரசியல் கலந்தாலோசனை மாநாட்டினால் நியமிக்கப்படுவோரின் மேற்பார்வையின் கீழ் நடத்தப் பெறும் இத் தேர்தல்களில் பங்குபற்றப் பிற அரசியற் கட்சிகள் எல்லாவற்றினதும் அங்கத்தினர்களும் பல்வேறு வாழ்க்கைத் துறைகளையும் சேர்ந்தவர்களும் தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பி வரலாம் என்றும் அது யோசனை தெரிவித்தது. டிஸ்திரிக்டுகளிலும் பட்டினங்களிலும் அரைவாசிக்கு மேற்பட்டவை ஏற்கனவே பொதுஜனத் தேர்தல்கள் நடத்தியுள்ள மாவட்டங்கள் எல்லாவற்றிலும் பொதுஜனத் தேர்தல் நடத்தப்பெற வேண்டும். இதே போல, மாவட்டங்களில் அரைவாசிக்கு மேற்பட்டவை ஏற்கனவே பொதுஜனத் தேர்தல்கள் நடத்தியுள்ள மாகாணங்கள், நிர்வாகப் பிரதேசங்கள் எல்லாவற்றிலும் பொதுஜனத் தேர்தல் நடைபெற வேண்டும். அரசாங்க நிர்வாகத்தின் ஒருமையைக் கருதி. மாகாண, நிர்வாகப் பிரதேச, மாவட்ட அரசாங்கங்களில் இவ்வாறாகத் தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் எல்லோரினதும் பெயர்கள், உறுதிப்படுத்துவதன் மூலம் நியமனம் செய்வதற்காக மத்திய அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மாகாணங்களிலும் பிரதேசங்களிலும் நியமனங்களை அரசாங்கம் உறுதிப்படுத்துவதென்ற இப்பிரேரணை அரசாங்க நிர்வாகத்தின் ஒருமைக்கு நன்மையானதல்ல என அரசாங்கம் பதிலளித்தது. இருப்பினும் அரசாங்கம் மாவட்ட உத்தியோகத்தர்களுக்குப் பொதுஜனத் தேர்தல்கள் நடத்துவதை யோசித்துப் பார்க்கும், ஆனால் மாகாண அரசாங்கங்களுக்குப் பொதுஜனத் தேர்தல்கள் ஒரு தேசிய அரசியலமைப்புச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டு, அதில் மாகாணங்களின் அந்தஸ்து வரையறுக்கப்படுத்தப்பட்ட பின்னர் மட்டுமே நடத்தப்பெற முடியும். தற்போதைக்கு, திரும்பப் பிடிக்கப்

பட்ட பகுதிகளில் நிலைமைகள் சாத்தியமானளவு விரைவில் வளமைபோலாக்கப்படக் கூடியதாயிருக்க, மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மாகாண அரசாங்க உத்தியோகத்தர்கள் மட்டுமே தங்கள் தங்கள் பதவிகளைப் பொறுப்பேற்க வேண்டும். இந்தக் கட்டத்தில், மாகாண அரசாங்கங்கள் மக்களால் தெரிவு செய்யப்படுவதற்கான அரசியலமைப்புச் சட்ட ஏற்பாடு மேற்கொள்ளவும் நடைமுறையிலிடவும் படும் வரை எல்லா விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களிலும் தற்போதுள்ள நிலைமை அப்படியே வைத்திருக்கப்பட வேண்டும் என்பதும், தற்போதைக்கு, சமாதானத்தையும் ஒழுங்கையும் உத்தரவாதம் செய்ய வேண்டி, ஒரு இடைக்கால ஏற்பாடு செய்து கொள்ளப்படலாம் என்பதுமான நான்காவதொரு பிரேரணையை சீன கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்தது. இடைக்காலத்தில் இந்தக் குறிப்பிட்ட பிரச்சினை தீர்வுக்காக அரசியல் கலந்தாலோசனை மாநாட்டிற்குச் சமர்ப்பிக்கப்படலாம் எனச் சீன கம்யூனிஸ்ட் கட்சி கூறியது, அரசாங்க நிர்வாகத்தின் ஒருமை முதலில் ஏற்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாது விடப்பட்டால் இது சமாதானத்திற்கும் புனர் நிர்மாணத்திற்கும் தடங்கலாகக் கூடும் என வலியுறுத்தி, இந்த விஷயம் சம்பந்தமாக ஒரு திட்டவட்டமான யோசனை விரைவில் இணங்கப்பட முடியும் என்ற நம்பிக்கையையும் அரசாங்கம் தெரிவித்தது. சீன கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொண்டு விவாதங்கள் நடத்த இணங்கியது.”

10. ஷாங்ராங் என்பது சாங்சிற்றயை மத்தியாகக் கொண்ட ஷான்ஸி மாகாணத்தின் தென்கிழக்குப் பகுதிக்கான ஒரு புராதனப் பெயர். அதன் மலையடர்ந்த பிரிவுகள் ஜப்பானுக்கு எதிரான பதிற் தாக்குதல் யுத்தத்தின் போது எட்டாம் மார்க்கச் சேனையின் 129-வது டிவிஷனின் தளமாக இருந்தன; அவை ஷான்ஸி-ஹோபெய்-ஷாண்டுங்-ஹோனன் விடுதலையாக்கப்பட்ட பிரதேசத்தின் ஒரு பகுதியாக இருந்தன. 1945, செப்டம்பரில் கோமின்ராங் யுத்தப் பிரபுயென் ஹ்ஸி-ஷான் பதின் மூன்று டிவிஷன்களைத் திரட்டிக்கொண்டு, ஜப்பானிய, கைப்பொம்மைத் துருப்புகளுடன் இணைந்து, தென்கிழக்கு ஷான்ஸி விடுதலையாக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள ஹ்ஸியாங்யுவான், ருன்லியூ, லூசெங் ஆகியவற்றைக் கைப்பற்ற அடுத்தடுத்து லின்ஃபன்னிலும் ஃபூஷானிலும், யிசெங்கிலும் இருந்தும் ரையுவானிலும் யூட்ஸெயிலும் இருந்தும் படையெடுத்தார். அக்டோபரில், இந்த விடுதலையாக்கப்பட்ட பிரதேசத்தின் சேனையும் மக்களும் இந்தத் தாக்குதற் படையில் பதிற்தாக்குதல் செய்து, 35,000 வீரர்களை அழித்தொழித்து, கோ(ர்), டிவிஷன் தளகர்த்தர்களுட்படப் பல உயர் தர அதிகாரிகளையும் கைப்பற்றினர்.

11. இது 1927-ல் கோமின்ராங் புரட்சிக்குத் துரோகம் செய்த சமயத்தில் இருந்து 1945 வரை கோமின்ராங்குடனான தனது போராட்டங்களிற் சீன கம்யூனிஸ்ட் கட்சி பெற்ற அனுபவங்களைக் குறிக்கிறது.

12. பதிற் தாக்குதல் யுத்தத்தின் போது முனைகள் வடக்கு, கிழக்கு, மத்திய, தென் சீனாவில் இருந்தன. ஜப்பானியரால் கைப்பற்றப்படாதிருந்த,

தென்மேற்கு, வடமேற்கு சீனுவிலான கோமின்ராங் பிரதேசங்களை மக்கள் வழமையாகப் பெறும் பின் பகுதி எனக் குறிப்பிட்டனர்.

13. **1931,** செப்டம்பர் 18-ம் திகதி, வடகிழக்குச் சீனுவில் முகாமிட்டிருந்த ஜப்பானிய "க்வான்டுங் சேனை" ஷென்யாங்கைக் கைப்பற்றியது. சியாங் கே-ஷெக்கின் "அறவே எதிராமை" உத்தரவின் கீழ் ஷென்யாங்கிலும் வடகிழக்கிலும் இருந்த சீனத் துருப்புகள் (வடகிழக்குச் சேனை) பெருஞ் சுவடுக்குத் தெற்கே வாபஸாகி, அதன் விளைவாக ஜப்பானியப் படைகள் லியாஓனிங், கிரின், ஹெய்லுங்கியாங் மாகாணங்களை விரைவிற் கைப்பற்றின. ஜப்பானிய படையெடுப்பாளர்கள் இழைத்த இந்த ஆக்கிரமிப்புச் செயலைச் சீன மக்கள் "செப்டம்பர் 18-ம் திகதிய சம்பவம்" என அழைத்தனர்.

14. **1937,** ஜூலை 7-ம் திகதி, ஜப்பானிய படையெடுப்புத் துருப்புகள் பீகிங்கிற்குத் தென்மேற்கே பத்துக் கிலோமீட்டர்கள் தூரத்தில் உள்ள லூகௌசியாஓவில் இருந்த சீனப் படையைத் தாக்கின. முழு மக்களினதும் தீவிரமான ஜப்பானிய-விரோத இயக்கத்தின் செல்வாக்கின் கீழ், அங்கிருந்த சீனத் துருப்புகள் எதிர்த்துப் போரிட்டன. இந்தச் சம்பவம், எட்டு ஆண்டுகள் நீடித்த, சீன மக்களின் வீரமிக்க, ஜப்பானுக்கெதிரான பதிற்றாக்குதல் யுத்தத்தின் ஆரம்பத்தைக் குறித்தது.

15. **1936**-ல் சாங் ஹ்ஸுஎஹ்-லியாங்கின் தலைமையிலான கோமின்ராங்கின் வடகிழக்குச் சேனையும், யாங் ஹு-செங் தலைமையிலான கோமின்ராங்கின் வடமேற்குச் சேனையும் ஸியானிலும் அதைச் சுற்றியும் நிறுத்தப்பட்டிருந்தன; அவை வட ஷென்ஸியில் வந்து சேர்ந்திருந்த சீனச் செஞ் சேனையைத் தாக்கும் பணிக்குப் பொறுப்பாக்கப்பட்டிருந்தன. சீனச் செஞ் சேனையினதும் மக்களின் ஜப்பானிய-விரோத இயக்கத்தினதும் செல்வாக்கிற்குட்பட்டு அவ்வு சீன கம்யூனிஸ்ட் கட்சியினுல் பிரேரிக்கப்பட்ட ஜப்பானிய-விரோத தேசிய ஐக்கிய முன்னணிக்கு இணங்கி, சியாங் கே-ஷெக் ஜப்பானை எதிர்க்கக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஐக்கியமுற வேண்டும் எனக் கோரின. சியாங் கே-ஷெக் இக் கோரிக்கையை நிராகரித்து, "கம்யூனிஸ்டுகளை அடக்குவ"தற்கான தனது ராணுவ தயாரிப்புகளில் மேலும் தீவிரமாகி, ஸியானின் ஜப்பானிய-விரோத வாலிபர்களையும் கொன்று குவித்தார். சாங் ஹ்ஸுஎஹ்-லியாங்கும் யாங் ஹு-செங்கும் கூட்டு நடவடிக்கை எடுத்துச் சியாங் கே-ஷெக்கைக் கைது செய்தனர். இதுவே 1936, டிசம்பர் 12-ம் திகதிய புகழ்பெற்ற ஸியான் சம்பவமாகும். சியாங் கே-ஷெக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஐக்கியமும் ஜப்பானுக்கு எதிர்ப்புமாகிய நிபந்தனைகளை ஏற்க நிர்ப்பந்திக்கப்பட்டு, பின்னர் விடுதலையாக்கி நான்கிங்கிற்குத் திரும்ப அனுமதிக்கப்பட்டார்.

16. **கூட்டு அரசாங்கம் பற்றி,** (ஆங்கிலப் பதிப்பு), அந்நிய மொழிகள் அச்சகம், பீகிங், 1960, பகுதி 4, பிரிவு "எமது குறிப்பான வேலைத்திட்டம்," விடயம் 2-ல் இருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

17. இது க்வாங்டுங், செகியாங், தெற்கு கியாங்ஸு, தெற்கு அன்ஹுவெய், மத்திய அன்ஹுவெய், ஹுனான், ஹுபெஹ், (வடக்கு ஹோனான் உட்படாது) ஹோனான் ஆகிய இடங்களிற் பரவலாகக் கிடந்த மக்கள் சேனையின் தளங்களைக் குறிக்கிறது.

18. 1945, செப்டம்பர் 11-ம் திகதியிலிருந்து அக்டோபர் 2-ம் திகதி வரை சோவியத் யூனியன், சீனா, அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள், பாஸிஸ ஜெர்மனியால் ஆரம்பிக்கப்பட்ட ஆக்கிரமிப்பு யுத்தத்திற் பங்குபற்றிய நாடுகளான இத்தாலி, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, பின்லாந்து ஆகியவற்றுடனான சமாதான உடன்படிக்கைகளை விவாதிக்கவும், இத்தாலிய காலனிகளை என்ன செய்வதென்பதை விவாதிக்கவும் லண்டனில் கூடினர். அமெரிக்காவும் பிரித்தானியாவும் பிரான்ஸும் சோவியத் யூனியனால் முன்வைக்கப்பட்ட நியாயமான பிரேரணைகளை நிராகரித்து, பாஸிஸ-விரோத யுத்தத்தில் வெற்றிக்குப் பின்னர் ருமேனியாவிலும் ஹங்கேரியிலும் பல்கேரியாவிலும் அமைக்கப்பட்டிருந்த மக்கள் அரசாங்கங்களை வீழ்த்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட தங்கள் ஏகாதிபத்தியவாத ஆக்கிரமிப்புக் கொள்கையிலும் விடாப்பிடியாக இருந்ததால், எந்த இணக்கமும் அடையப்படவில்லை.